சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, கழக வழக்கறிஞர் அணி சார்பில் காணொலி வாயிலாக திருவள்ளூர் மத்திய மாவட்டத்தைச் சார்ந்த ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகளின் வாக்கு எண்ணும் முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மற்றும் பயிற்சி வகுப்பு மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் முகவர்கள் பங்கேற்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. உடன் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமிமற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மற்றும் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி தொகுதி பார்வையாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் மற்றும் வானூர் சட்டமன்றத் தொகுதி வாக்கு எண்ணிக்கைக்கு செல்லும் முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டம், விழுப்புரம் , கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில், காணொலி காட்சி வாயிலாக, கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ , கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் தலைமையில், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர், விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. உடன் வானூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தி.கௌதம் திராவிடமணி, மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் விழுப்புரம் இரா.ஜனகராஜ், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மயிலம் சட்டமன்றத் தொகுதி :

வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கூட்டம்!

எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. சிறப்புரை! செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி, மே 4 – விழுப்புரம் வடக்கு மாவட்டம் மைலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட பட்ட கழக நிர்வாகிகள் வாக்கு எண் ணிக்கை முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது. விழுப்பு ரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ் தான் எம்.எல்.ஏ. தலைமையில் நடை பெற்ற நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி. கலந்துகொண்டு பல்வேறு ஆலோ சனைகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில் நடைபெற்ற மைலம் சட்டமன்றத் தொகுதியில்தேர்தலில் பணியாற் றிய ஒன்றிய கிளைக் கழக நிர்வாகி கள், கழக செயலாளர்கள். உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொண்ட கழக கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத்ரட்சகன் எம். பி. மே 4 ஆம் தேதி திண்டிவனம் அரசு பொறியியல் கல்லூரியில் மைலம் சட்டமன்றத் தொகுதி வாக்கு எண்ணிக்கையின் போது வாக்கு எண்ணும் முகவர்க ள்கவன முடன் விழிப்புடன் பணியாற்ற வேண்டும்.

ஒவ்வொரு சுற்று வாக்குப்பதிவின் எண்ணிக்கையை கண்காணிக்க வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் கடைசி சுற்று வரை வாக்கு எண் ணிக்கை முகவர்கள் விழிப்புடன் இருந்து கண்காணித்து பணியை மேற்கொள்ள வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை யில் பங்கேற்க உள்ள வாக்கு எண் ணிக்கை முகவர்களுக்கு அடையாள அட்டையை கழக கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத் ரட்சகன் எம்பி வழங் கினார்.

கூட்டத்தில் மயிலம் சட்டமன்றத் தொகுதி தேமுதிக வேட்பாளர் வெங்க டேசன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பி னர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச்செல்வன், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாநில தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய கழக செயலாளர்கள் அண்ணாதுரை, ராஜா ராமன், மொடையூர் துரை,மணி மாறன், செழி யன், இளம்வழுதிஉள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் ஊராட்சி கழக நிர் வாகிகள் பாக முகவர்கள், அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை!

பாக முகவர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்!

மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கள்ளக்குறிச்சி,மே. 4 - கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாள ரும், திமுக தலைமையி லான மதசார்பற்ற முற் போக்கு கூட்டணியின் சார்பாக ரிஷிவந்தியம் தொகுதியில் தொடர்ந்து 3வது முறையாக போட்டி யிடும் கழக வெற்றி வேட் பாளருமான வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது.

கழக நிர்வாகிகள் மற் றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் அனை வருக்கும் வணக்கம்,

கள்ளக்குறிச்சி (தனி) சட்டமன்ற தொகுதியில் மொத்தம் 370 வாக்குப் பதிவு மையங்களில் பதிவா கிய வாக்குகள் சின்ன சேலம் அருகில் உள்ள பங் காரம் லட்சுமி கலை அறிவி யல் கல்லூரி வளாகத்தில் எண்ணப்படுகிறது. மேலும் ரிஷிவந்தியம் தொகுதியில் மொத்தம் 350 வாக்குப்ப திவு மையங்களில் பதிவா கிய வாக்குகள் மற்றும் உளுந்தூர்பேட்டை சட்ட மன்ற தொகுதியில் மொத் தம் 375 வாக்குப்பதிவு மையங்களில் பதிவாகிய வாக்குகள் என இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக் கும் கள்ளக்குறிச்சி அடுத்த இந்திலி ஆர்.கே.எஸ் கல் லூரி வளாகத்தில் வாக்கு கள் எண்ணப்படுகிறது.

இதில் கள்ளக்குறிச்சி (தனி) சட்ட மன்ற தொகு தியில் 27 சுற்றுகளாகவும், ரிஷிவந்தியம் தொகுதியில் 25 சுற்றுகளாகவும், உளுந் தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் 27 சுற்றுகளாக மின்னணு வாக்குப்பதிவு எண்ணப் படுகிறது. முத லாவதாக காலை 8 மணிய ளவில் தபால் வாக்குகள் என்னும் பணிகள் தொடங் குகிறது. எனவே, அந்தந்த தொகுதிகளின் வாக்கு எண்ணும் மையத்திற்கு செல்லக்கூடிய முகவர்கள் தேர்தல் ஆணையத்தால் தங்களுக்கு வழங்கப்பட்ட உரிய அடையாள அட்டை களுடன் காலை 7 மணிக் குள் செல்ல வேண்டும். மேலும் ஒவ்வொரு பூத்வா ரியாக மின்னணு வாக்குப் பதிவுகள் எண்ணப்படும் போது முகவர்கள் மிகுந்த கவனமுடன் நிதானமாக செயல்பட வேண்டும். தபால் வாக்குகள் எண் ணும் போதும் அந்தந்த தொகுதி முகவர்கள் மிகுந்த கவனமுடன் செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தெற்கு ஒன்றியம் பீரகுப்பம் பழங்குடியினர் வாழ் பகுதியில் ஏற்கனவே குடிநீர்,சாலை,மின்சாரம் உள்ளிட்ட வசதிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், ஏற்படுத்திக் கொடுத்த நிலையில் தற்போது ROTARY CLUB மற்றும் AID INDIA தொண்டு நிறுவனம் இணைந்து பழங்குடியின மக்களின் வளர்ச்சிக்காக புதியதாக இல்லங்கள் கட்டிக் கொடுத்தனர். இக்கட்டிடங்களை அந்நிறுவனத்தாருடன் இணைந்து அவர் திறந்து வைத்தார். உடன் திருத்தணி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.இராஜேந்திரன், மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.